
# மாமுனிகள் பஞ்சகம்



மீண்டும் அந்தஅநந்தனின் மறுபிறவியாக ,
வையகம் தழைத்திட நீரும் ஓர்சாதாரண ;
ஆண்டு அவதரித்து ராமானுஜர் வழியில் ,
வைணவம் தழைக்கச் செய்த நாயனாரே ! 1.

திகழக்கிடந்தான் தாதாரப்பன் என்பவரின் ,
திருமகனாய் ஐப்பசி மூலத்தில் இவ்வுலகு ;
புகழ வைணவப்பணி சிறக்க எம்பெருமான் ,
திருவாயால் தனியன் கூறபெற்றவரன்றோ ! 2.

உபதேஸரத்னமாலை, ஆர்த்திப்ரபந்தமென ,
சிறந்த நல்காவியங்கள் பலவற்றின் மூலம் ;
உபதேசம் செய்து மக்கள் கடைத்தேறவேண்டி ,
பரந்தயெண்ணத்துடன் வாழ்ந்த பெரியஜீயரே ! 3.

எதிரிகள் உம்மை உயிருடன் கொல்லநினைத்து ,
நீர் குடிஇருந்த குடிலுக்குத் தீவைத்து மகிழ்ந்திட ;
எதிரில் ஆதிசேஷனாக வெளிவந்தவர்களுக்கு ,
நீர் யாரென்று நிரூபித்து காட்டிய மணவாளரே ! 4.

திருநாடு அலங்கரித்திட ஒரு ருத்ரோத்காரியில் ,
மாசிமாதத்தில் ஓர் திருவோணத் திருநாளன்று ;
பெருநாடாம் பரமபதத்தை எய்திட திருமாலின் ,
ஆசிதனை பெற்றமாமுனிகளே பல்லாண்டு வாழீ ! 5.